**செய்தி வெளியீடு எண்: 171** **நாள்: 01.03.2020**

**விருதுநகரில் புதிய அரசு மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டி**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை – 1.3.2020**

**மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்கி,**

**இந்த இனிய விழாவிற்கு வருகை புரிந்து**
தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு மத்திய சுகாதாரம்,
குடும்ப நலம், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும்
புவி அறிவியல் துறை அமைச்சர்
**டாக்டர். ஹர்ஷ் வர்தன்** அவர்களே!

முன்னிலை உரையாற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர்
**திரு. ஓ.பன்னீர்செல்வம்** அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சுருக்கமாகச் சொன்னாலும், அற்புதமான கருத்துக்களை சொல்லி அமர்ந்திருக்கின்ற
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்
**சகோதரர் டாக்டர். சி.விஜயபாஸ்கர்** அவர்களே!

இம்மண்ணின் மைந்தர்
மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்
**மரியாதைக்குரிய சகோதரர் திரு. K.T. ராஜேந்திரபாலாஜி** அவர்களே!

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு வரவேற்புரை ஆற்றிய மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர் **திரு. க.சண்முகம்** அவர்களே!
நிகழ்ச்சியிலே பங்கு பெற்றுள்ள

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி முன்னாள் அமைச்சர் சகோதரர் திரு.என்.தளவாய் சுந்தரம் அவர்களே!

மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய கா.நவாஸ் கனி அவர்களே!

மரியாதைக்குரிய சட்டப்பேரவை உறுப்பினர் திருமதி.மு.சந்திரபிரபா அவர்களே!

சட்டப் பேரவை உறுப்பினர் எம்.எஸ்.ஆர்.ராஜவர்மன் அவர்களே!
மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி மா.வசந்தி அவர்களே!

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் திரு.எஸ்.கே.மயில்சாமி அவர்களே!
மாவட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவர் திரு.வி.ஆரோக்கியராஜ் அவர்களே!
மாவட்ட அறங்காலல் குழுத் தலைவர் திரு.எஸ்.பலராமன் அவர்களே!
மாவட்ட பால்வளத் தலைவர் திரு.பா.கண்ணன் அவர்களே!
மாவட்ட கூட்டுறவு அச்சகத் தலைவர் திரு.எம். சித்திக் அவர்களே!
மாவட்ட கூட்டுறவு பண்டக சாலைத் தலைவர் திரு.சரவணன் அவர்களே!

நாடாளுமன்ற முன்னாள் துணைத் தலைவர், முன்னாள் மத்திய அமைச்சர் மரியாதைக்குரிய அண்ணன் தம்பிதுரை அவர்களே!

நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ரவீந்திரநாத் அவர்களே!

முன்னாள் அமைச்சர் பெருமக்களே,
முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின்
செயலாளர் **திருமதி பீலா ராஜேஷ்** அவர்களே!

நன்றியுரை ஆற்றவுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்
**திரு. இரா.கண்ணன்** அவர்களே!

உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!
பெரியோர்களே, தாய்மார்களே !
பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய முதற்கண் நன்றிகலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்விக் கண் திறந்து கல்விப் புரட்சி செய்த
**கர்ம வீரர் காமராஜர்,**
ஆன்மீக தொண்டாற்றிய **ரமண மகரிசி,**
திருப்பாவை தந்து தமிழுக்கு தொண்டாற்றிய
**கோதை நாச்சியார்,**
சதுரகிரி மலையில் வாசம் செய்யும் **சித்தர்கள்**

போன்றவர்களால் பெருமை பெற்ற விருதுநகர் மாவட்டத்தில்
ஒரு புதிய மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டுவதில்
நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

விருதுநகரில் மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட வேண்டும்
என்ற நெடுநாளைய எதிர்பார்ப்பு

எங்கள்அரசால் நனவாகி உள்ளது.

அதிலும், தேசிய நெடுஞ்சாலையில் அமைய உள்ள
மருத்துவக் கல்லூரி ஒரு வரப்பிரசாதமாக அமைய இருக்கிறது. கல்விக்கும், கடின உழைப்புக்கும் பெயர் பெற்ற
விருதுநகருக்கு, இந்த கல்லூரி மேலும் சிறப்பூட்டும்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின்
ஆட்சிக் காலத்தில், ராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து
பிரிக்கப்பட்டு, புதிதாக விருதுநகர் மாவட்டம்
1985ஆம் ஆண்டு மார்ச் 15ல் உருவாக்கப்பட்டது.

இம்மாவட்டத்திலுள்ள சிவகாசி **'தொழில் நகரமாகவும்',**
விருதுநகர் **'வியாபார நகரம்'** ஆகவும் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள பழமையான நகராட்சிகளில்
விருதுநகர் நகராட்சியும் ஒன்றாகும்.
இந்த நகராட்சி நூற்றாண்டு விழா காண உள்ளது என்று மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகின்றேன்.

விருதுநகர் மாவட்டத்தில், விவசாயம், பட்டாசு,
தீப்பெட்டி, அச்சு, ஸ்பின்னிங் மற்றும் விசைத்தறித்
தொழில்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.
இங்கு உணவு தானிய பொருட்கள் வியாபாரமும்,
மலைத் தோட்ட விளை பொருட்கள் வியாபாரமும்
பெரிய அளவில் நடைபெற்று வருகின்றன.

உயர்ந்த ரக கருங்கண்ணி பருத்தி பல ஊர்களில் உள்ள
ஆலைகளுக்கும், இங்கிருந்து தான் ஏற்றுமதியாகிறது.

தமிழ்நாடு எனப் பெயர் சூட்ட வேண்டும்
என்று கோரிய **தியாகி சங்கரலிங்கனார்**
அவர்கள் இம்மண்ணின் மைந்தர் ஆவார்.

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில்,
திருச்சுழி திருமேனிநாதர் திருக்கோயில்,
இருக்கன்குடி மாரியம்மன் கோயில்,
சவேரியார் தேவாலயம் போன்ற **ஆன்மீகத் திருத்தலங்களும்**
விருதுநகருக்கு புனிதத்தன்மை தருகின்றன.

**தமிழ்நாடு அரசின் சின்னத்தில்** உள்ள கோபுரம்,

இம்மாவட்டத்தில் உள்ள **ஸ்ரீவில்லிபுத்தூர் திருக்கோயில் கோபுரம் தான்** என்பது பெருமைக்குரியது.

அதிக செலவின்றி எளிதாக பராமரிக்கக் கூடியதாகவும்,
காவலுக்கு சிறந்ததாகவும் விளங்கும் நமது நாட்டின
நாய்களில் மிக வும் பெயர் பெற்ற
**இராஜபாளையம், சிப்பிப்பாறை** போன்ற
நாட்டு இன நாய்கள் இந்த மாவட்டத்தைச் சேர்ந்தவை.

அவற்றின் இனத் தூய்மையை பராமரிக்க
மாண்புமிகு அம்மாவின் அரசு சமீபத்தில்
தலைவாசலில் கால்நடை பூங்காவில் இதற்கென
தனியாக ஒரு ஆராய்ச்சி மையமும்,
இனப்பெருக்க மையமும் ஒன்றினை
அமைத்துள்ளது என்பதனை இத்தருணத்தில்
தெரிவித்துக் கொள்கிறேன்.

பிளவக்கல் அணை, சதுரகிரி சஞ்சீவி மலை,
செண்பகத்தோப்பு காட்டு அணில் சரணாலயம்,
தேவதானம் அணைக்கட்டு, அய்யனார் அருவி போன்ற
சுற்றுலாத் தலங்களைக் கொண்டது விருதுநகர் மாவட்டம்.

இத்தகைய பெருமை வாய்ந்த இம்மாவட்டத்தில், பள்ளிகள்,
கலை அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள்
அதிக அளவில் உள்ளன.

“**மக்களால் நான், மக்களுக்காகவே நான்**” என்ற
மாண்புமிகு அம்மாவின் அமுத மொழிக்கு
ஏற்ப செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசு,
இப்பகுதி மக்களின் கோரிக்கையினை ஏற்று,
விருதுநகர் மாவட்டத்தில் அரசு மருத்துவக் கல்லூரி
அமைக்க, மத்திய அரசின் ஆணையை பெற்று,
இன்று அடிக்கல் நாட்டியுள்ளது.

இம்மாவட்டத்தில் தொடங்கப்படும்
மருத்துவக் கல்லூரியையும் சேர்த்து
11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளை தொடங்கிட
குறுகிய காலத்தில் மத்திய அரசின் ஆணையைப் பெற்று
சரித்திர சாதனை படைத்த அரசு, மாண்புமிகு
அம்மாவின் அரசுதான் என்பதை இங்கே
பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இந்த மருத்துவக் கல்லூரி 2021–22ஆம் கல்வி ஆண்டு முதல் 150 மாணவர் சேர்க்கையுடன் செயல்படத் துவங்கும்.** இக்கல்லூரி துவங்குவதற்கான ஆயத்தப் பணிகளை மேற்கொள்ள கல்லூரி முதல்வர் மற்றும் சிறப்பு அலுவலரை நியமனம் செய்தும், கட்டடப் பணிகளுக்காக இந்த ஆண்டு 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கிய அரசு அம்மாவின் அரசு .

''**ஏழையாக இருக்கிறோம் என்று கவலைப்பட வேண்டாம். நானும் ஏழையாகத்தான் பிறந்தேன், வளர்ந்தேன். அந்த ஏழ்மைதான் என்னை வெற்றிப் பாதைக்கு அழைத்து சென்றது என்றார்**'' ஒரு மேலை நாட்டு அறிஞர்.

மருத்துவக் கல்வி கற்க பணம் ஒரு தடையாக இருக்கக் கூடாது என்ற நோக்கத்தின் அடிப்படையில், மாண்புமிகு அம்மாவின் அரசு, மருத்துவக் கல்லூரிகளை மாவட்டம் தோறும் தொடங்கி வருகிறது.

இதன் மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணாக்கர்களுக்கும் தரமான மருத்துவக் கல்வி கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

"**நோயை முற்றிலும் தவிர்ப்பது இயலாத ஒன்று ஆகும். எனவே தான், நோய் ஏற்படும்போது, அந்த நோயை நீக்குவதற்கான மருத்துவ வசதிகளை மக்களுக்கு அளித்து, அனைவருக்கும் நோயற்ற நல்வாழ்வு என்ற உயரிய இலக்குடன், சுகாதாரச் சேவைகளை அளிக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது**'' என்றார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

சுகாதாரத் துறையில் மாண்புமிகு அம்மாவின் அரசு நிகழ்த்தியுள்ள சாதனைகள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ், தகுதி வாய்ந்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 18,000 ரூபாய் நிதி உதவி வழங்கப்படுகிறது.

- இந்தியாவிலேயே அதிக அளவாக தமிழ்நாட்டில் மட்டுமே 99.9 சதவீத பிரசவங்கள் மருத்துவமனையில், அதிலும் குறிப்பாக 65 சதவீதம் அரசு மருத்துவமனைகளில் பிரசவங்கள் நடைபெறுகிறது. இது இந்தத் திட்டத்தின் வெற்றியைக் காட்டுகிறது.

- தரமான உயர்நிலை மருத்துவ சிகிச்சைகளை அனைத்து பிரிவு மக்களும் சமமாக பெற வேண்டும் என்பதற்காக முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

- மருத்துவ காப்பீட்டுத் தொகை தனியார் மருத்துவமனைகளில் நீங்கள் சிகிச்சை பெறவேண்டுமென்றால், 2 லட்சம் ரூபாயாக காப்பீட்டுத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டது. அது போதாது என்று மக்களிடத்திலிருந்து கோரிக்கை வந்தவுடன், அரசு அந்த ஏழை, எளிய மக்கள் தனியார் மருத்துவமனைக்குச் சென்று உயர்தர சிகிச்சை பெறுவதற்கு ரூபாய் 2 லட்சத்திலிருந்து ரூ 5 லட்சமாக உயர்த்தி ஆணை வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு.

- நாட்டிலேயே சுகாதாரத் துறையில் சிறப்பாக செயல்படும் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. அரசின் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளின் விளைவாக

**2010ஆம் ஆண்டில் ஆயிரம் குழந்தைகளுக்கு 24 ஆக இருந்த குழந்தை இறப்பு விகிதம் தற்போது 16 ஆக குறைந்துள்ளது. 90 ஆக இருந்த தாய்மார்களின் இறப்பு விகிதம் தற்போது 57 ஆக குறைந்துள்ளது. ஆகவே, மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக இது சாத்தியமாகியிருக்கிறது என்பதை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக குறிப்பிட விரும்புகிறேன்.**

நான் இந்த மாவட்டத்தில் நடைபெற்ற மாண்புமிகு
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின்
நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு
அறிவித்த அறிவிப்புகள் சிலவற்றை இங்கே கோடிட்டு காட்டுகிறேன், சில பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

- விருதுநகர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் புதிய எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி நிறுவப்பட்டுள்ளது.

- மூப்பியல் பிரிவு மற்றும் புற்றுநோய் பிரிவில் எக்கோ கார்டியோகிராம் கருவி வழங்கப்பட்டு இயங்கி வருகிறது. மேலும் டயாலிசிஸ் கருவியும் நிறுவப்பட்டுள்ளது.

- DNB-மருத்துவ பட்ட மேற்படிப்பு தொடங்க அரசாணைகள் வெளியிடப்பட்டு உள்ளன. அதற்கான வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

- ஸ்ரீவில்லிபுத்தூர் மருத்துவமனையில் டயலாசிஸ் கருவி நிறுவப்பட்டுள்ளது.

- சிவகாசி சுகாதார மாவட்டத்தில் துணை இயக்குநர் அலுவலகத்தில் தடுப்பு ஊசி மருந்துகள் சேமிப்பு கிடங்கு அமைக்கப்பட்டுள்ளது.

இது தவிர இந்த மாவட்டத்தில் மாண்புமிகு அம்மாவின்அரசால் கடந்த **3 ஆண்டுகளில் நிகழ்த்தப்பட்ட சாதனைகள்** சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

நீர் நிலைகளுக்கு புத்துயிர் ஊட்டிய குடிமராமத்து திட்டத்தின் கீழ், 47 கோடியே 37 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 146 ஏரிப் பணிகள் நடைபெற்று முடிந்திருக்கின்றன. குடிமராமத்து திட்டம் சிறப்பான திட்டம். பருவகாலங்களில் பெய்கின்ற பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் ஒரு சொட்டு கூட வீணாகாமல் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக அம்மாவினுடைய அரசு, விவசாயிகளுடைய நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, இந்த குடிமராமத்துத் திட்டத்தை கிராமங்களில் இருக்கின்ற ஏரிகள், குளங்கள், குட்டைகள், ஊரணிகளெல்லாம் தூர்வாரப்பட்டு, அதில், பெய்கின்ற மழைநீர் முழுவதும் தேங்கியிருக்கின்ற காட்சியைப் பார்க்கின்றோம். அந்த வகையில் ஏற்கனவே 146 பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. 15 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 35 பணிகள் தற்போது இந்த மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

- முதலமைச்சர் அவர்களின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தை நான் ஏற்கனவே அறிவித்தேன். மாவட்டத்தில் உள்ள பொதுமக்கள் தங்களது பிரச்சினைகளை அலுவலகத்திற்கு சென்று மனு கொடுக்க வேண்டும். அதற்குப் பதிலாக, முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தின் மூலம், அந்தந்த பகுதியிலே மாவட்ட ஆட்சித் தலைவரின் உத்தரவின் பேரிலே அங்கிருக்கின்ற அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாக மனுக்களைப் பெற்று, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தீர்வு காண்கிறார்கள். இந்த மாவட்டத்தில் மட்டும் 8 ஆயிரத்து 251 மனுக்கள் பெறப்பட்டு, 4 ஆயிரத்து 9 மனுக்களின் மீது தீர்வு காணப்பட்டுள்ளது. மூன்றே மாதங்களில் தீர்வு காணப்பட்டுள்ளது என்று சொன்னால், இந்த அரசின் நடவடிக்கை எப்படி இருக்கிறது என்பதை மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். **இவற்றில் முதியோர் ஓய்வூதியம் வேண்டி விண்ணப்பித்த 3,009 விண்ணப்பங்களில் 2,263 விண்ணப்பங்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகின்ற ஒரே ஆட்சி அம்மாவினுடைய ஆட்சி.**

- பள்ளி, கல்லூரி, பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் தொழில் பயிற்சி பயிலும் 79 ஆயிரத்து 675 மாணவ, மாணவியர்களுக்கு

விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்படுகிறது. இரு சாதாரண விஷயமல்ல, ஒரு மடிக்கணினி 12000 ரூபாய். இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் வழங்கப்படுவதாகத் தெரியவில்லை. ஆனால் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் படிக்கின்ற மாணவ, மாணவியருக்கு விஞ்ஞானக் கல்வி கொடுக்க வேண்டும், உலகத் தரத்திற்கேற்ற கல்வி கொடுக்க வேண்டும், அப்பொழுதுதான் நம்முடைய மாணவர்கள் பள்ளிப் படிப்பு முடிந்த பிறகு, உயர்கல்வி போகின்றபொழுது, ஒரு தரமான கல்வி கிடைக்கும். அப்படி தரமான கல்வி கிடைக்கின்றபொழுது, அவர்கள் வேலைவாய்ப்பை பெற முடியும். அதற்காக அம்மாவினுடைய அரசு கொண்டு வந்த அற்புதமான திட்டம் மடிக்கணினி திட்டம். இந்த மடிக்கணினித் திட்டத்தை இன்றைக்கு தமிழகம் முழுவதும் ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்த மாணவ, மாணவியருக்கும் விஞ்ஞானக் கல்வி கொடுத்த ஒரே அரசு அம்மாவினுடைய அரசு தான்.

- அரசு மருத்துவமனைகளில் பிறந்த 6 ஆயிரத்து 321 குழந்தைகளுக்கு, 16 பொருட்கள் அடங்கிய **"அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம்"** கொடுத்தது அம்மாவினுடைய அரசு தான்.

- மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் 59 ஆயிரத்து 504 குறு, சிறு விவசாயிகளுக்கு 398 கோடி ரூபாய் பயிர்க்கடனை கொடுத்திருக்கிறோம்.

- பசுமை வீடுகள் 914 பேருக்கு கொடுத்திருக்கிறோம்.

- மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கியின் மூலமாக, 820 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது.

- வேலைவாய்ப்பு முகாம் மூலம் 2 ஆயிரத்து 749 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பை தந்த அரசு அம்மாவினுடைய அரசு.

  857 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

- இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா 2016 சட்டமன்றத் தேர்தலின்போது, நான் மீண்டும் முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்பட்டவுன், உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் மானிய விலையில் வழங்கப்படும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வாக்குறுதி அளித்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் மறைந்தாலும், மாண்புமிகு

அம்மா கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுகின்ற விதமாக, இந்த மாவட்டத்தில் மட்டும் 5976 உழைக்கின்ற மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் மானிய விலையில் கொடுத்திருக்கிறோம். அதற்கு மட்டும் மானியம் 10 கோடியே 32 லட்சம் ரூபாய் மானியம் கொடுத்திருக்கிறோம்.

- 1,510 பேருக்கு கறவை பசுக்கள் கொடுத்திருக்கிறோம்.

- 14,153 பெண் தொழிலாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள் கொடுத்திருக்கிறோம்.

- 5 ஆயிரத்து 371 பேருக்கு தாலிக்குத் தங்கம் 25,000 ரூபாயில் கொடுத்திருக்கிறோம்.

- திருமண உதவித் திட்டத்தின் கீழ் தாலிக்குத் தங்கம் 5 ஆயிரத்து 280 பட்டம் / பட்டயம் படித்த ஏழைப் பெண்களுக்கு 50,000 ரூபாய் நிதியுதவியுடன் கொடுத்திருக்கிறோம்.

- சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், முதியோர் உட்பட 56 ஆயிரத்து 55 நபர்களுக்கு தலா 1,000 ரூபாய் ஓய்வூதியமாக இந்த மாவட்டத்தில் மட்டும் வழங்கியிருக்கிறோம்.

- சுமார் 70 ஆயிரத்து 961 ஆதிதிராவிட மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகை 10 கோடியே 74 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

- சாத்தூரில் மதுரை–கன்னியாகுமரி நெடுஞ்சாலையில் வைப்பாற்றின் குறுக்கே 16 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் **ஒரு உயர்மட்டப் பாலம்** கட்டப்பட்டுள்ளது.

- அதேபோல, கட்டனூர் சாலை, சாத்தூர்–சிவகாசி–கழுகுமலை சாலை, சாத்தூர்–சிவகாசி–கழுகுமலை சாலை சத்திரப்பட்டி ஆகிய இடங்களில் புதிய பாலங்கள் அமைக்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ளது.

- சீரான, தடையற்ற மின்விநியோகத்தினை உறுதி செய்யும் வகையில், மாண்புமிகு அம்மாவின் அரசு, 36.9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் **சவாசுபுரத்தில்** துணை மின் நிலையம் அமைத்துள்ளது.

- அதேபோல, மல்லாங்கிணறு, நல்லமநாயக்கன்பட்டி, துலுக்கப்பட்டியில் 38.8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டன.

- 14.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அருப்புக்கோட்டை, சாத்தூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளது.

- வைப்பாற்றின் குறுக்கே அச்சங்குளம் மற்றும் கோட்டைப்பட்டி கிராமத்தில் சுமார் 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2 தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன.

இது தவிர, இந்த நிகழ்ச்சியின் வாயிலாக

புதிய மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

சுமார் 445 கோடி ரூபாய் மதிப்பிலான அருப்புக்கோட்டை, சாத்தூர் மற்றும் விருதுநகர் நகராட்சிகளுக்கான தாமிரபரணி ஆற்று நீரை நீராதாரமாக கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம் உட்பட 828 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 10 பணிகளுக்கு நான் இன்று **அடிக்கல்** நாட்டியுள்ளேன். நீங்கள் குடிநீர் வேண்டுமென்று கேட்கிறீர்கள். மாண்புமிகு இந்த மண்ணின் மைந்தர் மரியாதைக்குரிய சகோதரர் ராஜேந்திர பாலாஜி அவர்களும், உங்களுடைய சட்டப்பேரவை உறுப்பினர்களும் இந்தப் பகுதிக்கு நிலையான பாதுகாக்கப்பட்ட தண்ணீர் வழங்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில், கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு 445 கோடி ரூபாயில் இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

விருதுநகர், சாத்தூர், சிவகாசி, அருப்புக்கோட்டை மற்றும் வெம்பக்கோட்டை ஒன்றியங்களுக்கு உட்பட்ட சுமார் 755 ஊரக குடியிருப்புகள் பயன்பெறும், 234 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான தாமிரபரணி ஆற்றை நீர் ஆதாரமாகக் கொண்ட **"கூட்டுக் குடிநீர் திட்டம்"** உட்பட 253 கோடியே 91 லட்சம் ரூபாய் மதிப்பிலான 25 பணிகளை நான் **திறந்து வைத்துள்ளேன்.**

இன்றைய தினம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலமாக இன்றைக்கு நான் குறிப்பிட்ட பகுதிகளுக்கு 725 ஊரகக் குடியிருப்புகளுக்கு கூட்டுக் குடிநீர் திட்டம் வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு.

அதே போல, 22,350 பயனாளிகளுக்கு சுமார் 47 கோடியே 28 லட்சம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை இன்று வழங்க உள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

விருதுநகர் மாவட்டம் சிவகாசியை மையமாக கொண்டு செயல்பட்டு வரும் சுமார் 900 பட்டாசு தொழிற்சாலைகளின்

மூலம், 8 லட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. பட்டாசு வழக்கு உச்ச நீதிமன்றத்தில் வந்தபோது, பட்டாசு உற்பத்தியாளர் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வு காணும் வேண்டுமென்று உங்களுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பகுதியிலிருக்கின்ற பட்டாசு தொழிலதிபர்களை அழைத்த வந்து என்னை சந்தித்தார். உச்ச நீதிமன்றத்திலே வழக்கு நடைபெறுகின்றது, அந்த வழக்கில் அரசும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். அதன்படி, அரசும் அந்த வழக்கிலே சேர்த்துக் கொள்ளப்பட்டு, மூத்த வழக்கறிஞரை அரசின் சார்பாக வைத்து, உச்ச நீதிமன்றத்தில் வாதாடி, நல்ல தீர்ப்பைப் பெற்றுத் தந்த அரசு அம்மாவினுடைய அரசு. சிவகாசி என்று சொன்னலே, பட்டாசு தான் ஞாபகத்திற்கு வரும். ஆகவே, இன்றைக்கு பட்டாசு உற்பத்தி செய்கின்ற முதலாளிகளுக்கும், பணிபுரிகின்ற தொழிலாளிகளுக்கும் பாதுகாப்பு அளித்த ஒரே அரசு அம்மாவினுடைய அரசு என்பதை கோடிட்டுக் காட்ட விழைகின்றேன்.

அமைதி, வளம், வளர்ச்சி என்ற மாண்புமிகு அம்மாவின் அமுத மொழியை பின்பற்றி கடந்த மூன்று ஆண்டுகளாக மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள் மற்றும் மாநில வளர்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது.

- காவேரி ஆற்றின் உபரி நீரை விருதுநகர் மாவட்டம் குண்டாற்றிற்கு கொண்டு வர திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

- இதன்படி காவிரி உபரி நீர் **மாயனூர் கதவணையிலிருந்து திருப்பப்பட்டு, கரூர், திருச்சி, சிவகங்கை, விருதுநகர் வரை** – புதிய கால்வாய் வெட்டப்பட்டு தண்ணீர் கொண்டுவரப்பட்டு, குண்டாற்றில் இணைக்கப்பட்டு, இந்த மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் பாசன வசதி பெறும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.
- அதேபோல உங்களுடைய மாவட்ட அமைச்சர், சட்டப்பேரவை உறுப்பினர் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கின்றார்கள். அந்த கோரிக்கைகளை ஏற்று, சில அறிவிப்புகளை வெளியிட விரும்புகிறேன்.

## புதிய அறிவிப்புகள்

1. பொது மக்கள் மற்றும் அலுவலர்களின் சிரமத்தை போக்கும் வண்ணம் பழைய சேதமடைந்த சிறிய கட்டடத்தில் இயங்கி வரும் **அருப்புக்கோட்டை வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய அலுவலகக் கட்டடம்** அமைத்துத் தரப்படும்.

2. பொது மக்கள் மற்றும் அலுவலர்களின் சிரமத்தை போக்கும் வண்ணம் பழைய கட்டடத்தில் இயங்கி வரும் **இராஜபாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம்** அமைத்துத் தரப்படும்.

3. பொது மக்கள் மற்றும் அலுவலர்களின் சிரமத்தை போக்கும் வண்ணம் பழைய கட்டடத்தில் இயங்கி வரும் **விருதுநகர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம்** அமைத்துத் தரப்படும்.

4. சுமார் 77,000 மக்கள் தொகை கொண்ட **திருவில்லிபுத்தூர் நகராட்சிக்கு** புகை மாசு அல்லாத சுற்றுச் சூழலுக்கு உகந்த **பொது எரிவாயு தகன மயானம்** அமைக்கப்படும்.

5. சுமார் 55,000 மக்கள் தொகை கொண்ட **திருத்தங்கல் நகராட்சிக்கு** புகை மாசு அல்லாத சுற்றுச் சூழலுக்கு உகந்த **பொது எரிவாயு தகன மயானம்** அமைக்கப்படும்.

6. மலைவாழ் பழங்குடியினரின் நலன் கருதி, **வத்திராயிருப்பு வட்டம், கான்சாபுரத்திலிருந்து** மலைவாழ் பழங்குடியினர் வசிக்கும் அத்திக்கோவிலுக்கு செல்லும் சாலையில் சிற்றாற்றின் குறுக்கே ஒரு **உயர்மட்டப் பாலம்** அமைக்கப்படும்.

7. சாத்தூர் வட்டம், மேலமடை வருவாய் கிராமத்தில் அமைந்துள்ள தென் மாவட்டங்களில் பிரசித்திபெற்ற **அருள்மிகு இருக்கன்குடி மாரியம்மன் கோயிலுக்குச் செல்ல அர்ஜீனா நதி மற்றும் வைப்பாறு நதி** ஆகியவற்றின் குறுக்கே **உயர்மட்ட மேம்பாலம்** அமைக்கப்படும்.

8. திருச்சுழி வட்டம், **திருச்சுழி–பள்ளிமடம்** கிராமங்களுக்கு இடையேயும் மற்றும் **திபச்சேரி–பனையூர்** செல்லும் சாலையிலும், அப்பகுதியிலுள்ள 40 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயன்பெறும் வகையில் குண்டாற்றின் குறுக்கே **இரண்டு உயர்மட்டப் பாலங்கள்** கட்டித் தரப்படும்.

9. கடந்த எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவின் போது சிவகாசி மாநகராட்சியாக்கப்படும் என அறிவித்தேன். அதற்கான பூர்வாங்க பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

10. நகர்ப்புர உள்ளாட்சித் தேர்தல் முடிவுற்றதும், இது நடைமுறைக்கு வரும் எனத் தெரிவித்து, சுமார் 3 லட்சத்திற்கு மேலான மக்கள்தொகை கொண்ட **சிவகாசி நகராட்சி உருவாக்கப்பட்டு நூறு ஆண்டுகள் நடைபெறும் நிலையில், அந்த நகராட்சிக்கு சாலை, பூங்கா, மின்விளக்கு, வடிகால் வசதி போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த சிறப்பு நிதியாக 50 கோடி ரூபாய் அரசால் ஒதுக்கீடு செய்யப்படும். அதுவும் இந்த மண்ணின் மைந்தர் மாண்புமிகு அமைச்சர் திரு. ராஜேந்திரபாலாஜி மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளிற்கு இணங்க இந்த சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.**

11. பக்தர்கள் மற்றும் **சிவகாசி** மக்களின் நெடுங்கால கோரிக்கையான **காசி விசுவநாதர் திருக்கோவில் இராஜ கோபுரம் அமைக்க 3 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும்.**

12. பக்தர்கள் மற்றும் **திருத்தங்கல்** மக்களின் நெடுங்கால கோரிக்கையான **திருநின்ற நாராயண பெருமாள் திருக்கோவில் இராஜ கோபுரம் அமைக்க 3 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும்.**

மாண்புமிகு மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்ற போது, தமிழகத்தை 2025–க்குள் காசநோய் இல்லாத மாநிலமாக உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். நிச்சயமாக மாண்புமிகு அம்மாவுடைய அரசு துரிதமான நடவடிக்கைகளை எடுத்து 2025–க்குள் காசநோய் இல்லாத மாநிலமாக தமிழ்நாடு உருவாக்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவிக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, கடந்த 16 ஆண்டு காலமாக போலியோ இல்லாத மாநிலம் தமிழ்நாடு என்ற நிலையை எட்டியிருக்கின்றது என்பதையும் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகின்றேன். அதேபோல, உறுப்புமாற்று அறுவை சிகிச்சையில் தொடர்ந்து 6 ஆண்டுகளாக தேசிய விருதினை பெற்ற மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை பெற்றிருக்கிறது. உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் தொடர்ந்து இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் பெற்று வருகிறது.

இரண்டு கைகளும் இல்லாத திண்டுக்கல் மாவட்டத்தை சேர்ந்த திரு. நாராயணசாமி என்ற தொழிலாளி தனக்கு இரண்டு கையும் பொருத்த

வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை வைத்தார். அவரது கோரிக்கையை ஏற்று நம்முடைய மருத்துவக் குழு இரவு பகல் பாராமல் பணி செய்து அவருக்கு இறந்தவரின் உடலிருந்து இரண்டு கைகளை எடுத்து, அவருக்கு பொருத்தி சாதனை படைத்த அரசு அம்மாவுடைய அரசு. மருத்துவத் துறையிலே இதனை ஒரு மைல்கல் என்று சொல்லலாம். அந்தளவுக்கு தமிழகத்திலே மருத்துவத்துறை சிறந்து விளங்கி கொண்டு இருக்கிறது என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு இருதய மாற்று அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை போன்ற சிகிச்சைகள் எல்லாம் தமிழ்நாட்டிலேயே பல்வேறு மருத்துவமனைகளிலே ஏழை எளிய மக்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றன என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன். அதுமட்டுமல்லாமல், Heart Attack வந்தால் Stent வைத்து காப்பாற்றக் கூடிய அளவிற்கு எல்லா மாவட்ட மருத்துவமனைகளிலும் இன்றைக்கு கேத்லாப் கருவிகளை நாங்கள் கொடுத்திருக்கின்றோம். இதனால் ஏழை எளிய மக்கள் உடனடியாக Stent வைக்கக் கூடிய அளவிற்கு நமது மருத்துவமனைகள் உயர்ந்திருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

சிறுநீரகம் பாதிக்கப்பட்டால் தனியார் மருத்துவமனைகளுக்கு சென்றால் டயாலிசஸ் செய்வதற்கு பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவாகும். அதைப் போக்குவதற்காக தாலுகா மருத்துவமனைகள் வரை டயாலிசஸ் சிகிச்சை அளிக்க கருவிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனைக்கு நம்முடைய மாண்புமிகு பாரதப் பிரதமர் மரியாதைக்குரிய திரு. நரேந்திர மோடி அவர்கள் மதுரைக்கு வந்து அடிக்கல் நாட்டினார்கள். மிக விரைவாக, அந்தப் பணிகள் விரைவிலேயே துவங்கப்படும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். அந்த மருத்துவமனை டெல்லியில் இருக்கின்ற எய்ம்ஸ் மருத்துவமனைக்கு நிகராக இருக்கும் என்று நம்முடைய மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்.

ஆகவே, இவையெல்லாம் மத்தியிலே இணக்கமான உறவு இருக்கின்ற காரணத்தினாலே, மத்திய அரசிடமிருந்து நம்முடைய மக்களுக்கு உயர்தர சிகிச்சை அளிப்பதற்காக தமிழ்நாடு அரசால் கொண்டுவரப்பட்ட திட்டம் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டு இருக்கின்றேன்.

அதோடு, புற்றுநோய் சிகிச்சைக்கு உரிய சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்காக இந்தியாவிலேயே முதல்முறையாக தலா 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10 Linear Accelerator கருவிகள் அமைக்க நடவடிக்கை

மேற்கொள்ளப்பட்டுள்ளது. சென்னை ஓமந்தூரார் பல்நோக்கு சிறப்பு மருத்துவமனை, இராயப்பேட்டை மருத்துவமனைகளில் Linear Accelerator கருவிகள் பொருத்தப்பட்டு துவக்கி வைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் மேலும் 9 மருத்துவமனைகளில் Linear Accelerator கருவிகள் அமைக்கப்படவுள்ளன. அதுபோல புற்றுநோயை கண்டுபிடிக்க PET CT Scan கருவி தலா 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 7 மருத்துவமனைகளில் அமைக்கப்படவுள்ளன. இதை எல்லாம் எதற்காக சொல்கிறேன் என்று சொன்னால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மறைவிற்கு பிறகு, அம்மா அவர்களின் வழியிலே வந்த அம்மாவுடைய அரசு எந்தளவிற்கு ஏழை எளிய மக்களுக்கு சிகிச்சை அளித்து வருகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தனியார் மருத்துவமனைகளைவிட கூடுதல் வசதிகளை கொண்ட மருத்துவமனைகளாக அரசு மருத்துவமனைகளை உருவாக்கி இருக்கின்றோம். உயர்ரக மருத்துவக் கருவிகளை அமைத்து, நோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சை அளிக்கக்கூடிய மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டு இருக்கின்றேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசின் தைரியமான,
விவேகமான நடவடிக்கைகளினால், தமிழ்நாட்டில்
ஒவ்வொரு துறையும் தொடர்ந்து பல்வேறு விருதுகளை
பெற்று, தமிழ்நாடு இந்தியாவின் முதன்மை மாநிலமாக
திகழ்கிறது என்பதை பெருமையுடன்
தெரிவித்துக் கொள்கிறேன்.

**“அச்சம் என்பது மடமையடா.**
**அஞ்சாமை திராவிடர் உரிமையடா”**

என்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் பாடலை நினைவு கூர்ந்து,

இந்த நிகழ்வினை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் இந்த நேரத்திலே எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் சிறுபான்மை மக்களுக்கு சிலர் ஒரு அச்ச உணர்வை ஏற்படுத்தி வருகின்றார்கள். இன்றைக்கு மாண்புமிகு அம்மாவுடைய அரசு சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் அரசாக திகழ்ந்து வருகிறது. இன்றைக்கு என்.பி.ஆர்., தேசிய மக்கள் தொகை பதிவேடு, மக்கள் தொகை கணக்கெடுப்பு, அதாவது சென்செஸ். இதனை கணக்கெடுக்க இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாட்டை பொறுத்த வரைக்கும் இந்த என்.பி.ஆர்.—ல் பல்வேறு சந்தேகங்கள் சிறுபான்மை மக்களுக்கு இருந்து கொண்டு இருக்கின்றன.

அந்த என்.பி.ஆர்.–ல் தான் 2011–ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே முதல்முதலாக கணக்கெடுக்கப்பட்டது. அந்த 2011 –ல் கணக்கெடுக்கப்பட்ட அந்த பட்டியலிலே இப்பொழுது மூன்று கேள்விகள் புதிதாக இணைக்கப்பட்டுள்ளன. ஒன்று எந்த மொழி பேசுகிறீர்கள் என்று, இரண்டாவது தாய் தந்தையர் பிறந்த இடம், மூன்றாவது ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை குறித்த விவரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பது. ஆனால் மத்திய அரசு தெளிவாக சொல்லிவிட்டது, இவை இருந்தால் வழங்கலாம். இல்லாவிட்டால் வழங்க தேவையில்லை என்று. இந்த மூன்றும் உங்களுக்கு தெரிந்தால் சொல்லலாம், இல்லாவிட்டால் தேவையில்லை என்று தெளிவாக சொல்லப்பட்டு விட்டது.

ஆகவே, சிறுபான்மை மக்கள் அச்சப்பட தேவையே இல்லை. வேண்டுமென்றே சில எதிர்க்கட்சியினர் தூண்டிவிட்டு சிறுபான்மை மக்களை குழப்பி, பொய்யான செய்தியை, அவதூறான செய்தியை நாள்தோறும் சொல்லி, சொல்லி அவர்களது மனதில் ஒரு அச்ச உணர்வை ஏற்படுத்திவிட்டார்கள்.

நாங்கள் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக சொல்லி கொள்கிறோம். சிறுபான்மை மக்கள் அச்சப்பட தேவையில்லை. எந்தவிதத்திலும் தமிழ்நாட்டில் பிறந்த, தமிழ் மண்ணில் பிறந்த எந்த ஒரு சிறுபான்மை மக்களும் பாதிக்கப்பட மாட்டார்கள் என்ற உறுதியை இந்த அரசு தருகிறது. அமைதியான மாநிலம் தமிழ்நாடு. அமைதிப் பூங்காவாக தமிழ்நாடு திகழ்ந்து கொண்டு இருக்கிறது. ஏதாவது ஒரு பிரச்சனையை உருவாக்கி இன்றைக்கு அரசியல் ஆதாயம் தேட எதிர்க்கட்சிகள் முயல்கின்றன. அதற்கு நீங்கள் துணை போக வேண்டாம் என்று சிறுபான்மை மக்களை தாழ்மையோடு இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டு நாட்களுக்கு முன்பு, வண்ணாரப்பேட்டையில் இருந்து இஸ்லாமிய அமைப்பை சேர்ந்த நிர்வாகிகளும், இஸ்லாமிய மதத்தை சேர்ந்த சகோதர, சகோதரிகளும் என்னை வந்து சந்தித்தார்கள். அதேபோல பல்வேறு மாவட்டத்திலிருந்து இஸ்லாமிய சமூகத்தை சேர்ந்தவர்கள் என்னை சந்தித்தார்கள். ஒரு அச்ச உணர்வை தெரிவித்தார்கள். நான் அவர்களிடத்திலே தெளிவாக சொன்னேன். தமிழ் மண்ணில் பிறந்த எந்த ஒரு இஸ்லாமியரும் இதனால் பாதிக்கப்பட மாட்டார்கள் என்று தெளிவாக சொன்னேன். ஆகவே நீங்கள் அச்சப்பட வேண்டியதே இல்லை. நமது பக்கத்து மாநிலங்களான ஆந்திரா மாநிலம், தெலுங்கானா மாநிலம், போன்ற மாநிலங்களிலேயே எப்படி என்.பி.ஆர். எடுக்கின்றார்களோ, அதையே நாங்கள் கடைப்பிடிப்போம் என்பதை தெளிவுபடுத்தி விட்டோம். மத்திய அரசும் தெளிவுப்படுத்தி விட்டது. என்.பி.ஆர். எடுக்கின்றபோது நீங்கள் எந்த ஆதாரமும் சமர்ப்பிக்க வேண்டியதில்லை. விரும்பினால் சொல்லலாம், விருப்பம் இல்லாவிட்டால் அந்த மூன்று கேள்விகளுக்கும் பதில் சொல்லத் தேவையில்லை என்று தெரிவித்து விட்டார்கள். ஆனால் சிலர் வேண்டுமென்றே திரும்ப திரும்ப இஸ்லாமிய மக்களிடையே ஒரு அச்ச

உணர்வை ஏற்படுத்தி, இன்றைக்கு அவர்களுக்கு ஒரு நிம்மதியில்லாத வாழ்க்கையை உருவாக்கி இருக்கிறார்கள்.

சிறுபான்மை மக்களை நாங்கள் கேட்டுக் கொள்வது எல்லாம், எங்களுடைய அரசு, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்திலும் சரி, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் காலத்திலும் சரி, எங்களது ஆட்சி காலத்திலும் சரி, நாங்கள் உங்களுக்கு துணை நிற்போம். உங்களுக்கு அரணாக இருப்போம். உங்கள் பாதுகாவலராக இருப்போம். ஆகவே, சிறுபான்மை மக்கள் அச்சப்பட தேவையில்லை. நீங்கள் இயல்பு வாழ்க்கை வாழுங்கள். இஸ்லாமிய பெண்கள் இரவு நேரங்களில் கூட சாலையிலே அமர்ந்து போராடிக் கொண்டு இருக்கிறார்கள். தயவு செய்து, அன்புகூர்ந்து நான் கேட்டுக் கொள்வது எல்லாம், அதை தவிர்த்து விட்டு, அரசிற்கு ஒத்துழைப்பு நல்குங்கள். நீங்கள் எண்ணுகின்றபடி இந்த அரசாங்கம் உங்களுக்கு ஒத்துழைக்கும் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல என்.ஆர்.சி. பற்றி மத்திய அரசு கேட்கவில்லை. அதைப்பற்றி நமக்கு தேவையில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மிகச் சிறப்பாக இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த, அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் இந்த நேரத்திலே நன்றி தெரிவித்து, அதோடு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடத்திலே தமிழகத்தின் 11 மாவட்டங்களுக்கு புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் வேண்டும் என்று கேட்டோம். மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களிடம் சொல்லி 11 மாவட்டங்களுக்கும் புதிய மருத்துவக் கல்லூரிகளை வழங்கிய மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடிஜி அவர்களுக்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, இந்த மருத்துவக் கல்லூரி வருவதற்கு எனக்கு துணையாக நின்ற நம்முடைய சுகாதாரத் துறை அமைச்சர் சகோதரர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்களுக்கும், அவருக்கு துணையாக நின்ற துறையினுடைய செயலாளர் அவர்களுக்கும், மற்றும் பொதுப்பணித் துறை அதிகாரிகளுக்கும், என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்து, விடைபெறுகின்றேன்,

நன்றி!
வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**